2012 ஏப்ரல் 24]

கன்னியாகுமரியில் ஒரு புதிய பட்ட மேற்படிப்பு மையம் தொடங்குவதற்காகவும், ஈரோட்டில் ஒரு பட்ட மேற்படிப்பு மையம் தொடங்குவதற்காகவும் என ஐந்து இடங்களில் புதிய பட்ட மேற்படிப்பு மையங்களை இந்த ஆண்டு தொடங்கலாம் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். சீர்காழி தொகுதியில் பொறியியல் கல்லூரி அமைப்பதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசினார்கள். நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். பொறியியல் கல்லூரிகளில், தேவையான அளவுக்கு, ஒற்றைச் சாளர முறை (Single Window System) மூலமாக மாணவர்கள் சேர்க்கை செய்வதற்குப் போதுமான இட வசதிகள் நம்முடைய மாநிலத்தில் இருக்கின்றன. ஆகவே, இருக்கின்ற அந்தக் கல்லூரிகளில் சேர்ந்து படிப்பதற்கு நம்முடைய மாணவர்கள் அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த Single Window System மூலமாக அனைத்து இடங்களும் பூர்த்தியடைகின்ற காலக்கட்டத்தில் மாணவர்களுக்குத் தேவை இருப்பின், அதுபோன்ற ஒரு சூழ்நிலை வருகின்றபோது ஒரு புதிய கல்லூரியைத் தொடங்குவது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 151, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

151—

பத்திரப் பதிவாளர் அலுவலகம்

***5834—திரு. அ. பாப்பா சுந்தரம்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம், குளித்தலையில் உள்ள தோகைமலையில் பத்திரப் பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கரூர் மாவட்டம், குளித்தலை வட்டத்தில் உள்ள தோகைமலையிலே புதிய சார்பு அலுவலகம் திறக்கப்படுமா என்று கோரியிருக்கிறார்கள். அங்கே புதிய சார்பு அலுவலகம் திறப்பதற்கான எந்தவிதக் குறிப்பும் அரசிடம் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.*

திரு. அ. பாப்பா சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டதையெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், கேள்வி நேரத்தின்போது சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கெல்லாம் இல்லையென்ற பதிலே சொல்லாமல் இருக்கின்ற அமைச்சர்கள் இந்த அவையிலே இருக்கின்றார்கள்.*

தோகைமலை என்பது கிட்டத்தட்ட 25 வருவாய்க் கிராமங்களைக் கொண்டது. 200–க்கும் மேற்பட்ட குக்கிராமங்களைக் கொண்டது. மிகவும் பிற்பட்ட பகுதி என்பது அமைச்சர் அவர்களுக்குக்கூட தெரியும் என்று நினைக்கிறேன். அதிலே இன்னொரு சிக்கல் என்னவென்று சொன்னால், அங்கே இருக்கின்ற கிராமவாசிகள் அருகில் இருக்கின்ற திருச்சி மாவட்டத்திற்குச் சென்று பதிவு செய்கிறார்கள். நாங்கள் இருப்பது கரூர் மாவட்டம். இதிலே நிருவாகச் சிக்கல்கள் பல ஏற்படுகின்றன. ஆகவே, அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து இதை அம்மா அவர்களின் பார்வைக்கு எடுத்துச்சென்று, வறட்சிப் பகுதியான தோகைமலைக்குச் சார்பு அலுவலகம் அமைத்துத் தர வேண்டுமென்று அன்போடு தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

2012 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியுள்ளபடி, தோகைமலை, குளித்தலை வட்டத்திலே இருக்கின்றது. அது கரூர் மாவட்டத்திலே வருகின்றது. ஆனால், மணப்பாறை சார்பதிவு அலுவலகம் திருச்சி பதிவு மாவட்டத்திலே வருகின்றது. இப்படிப் பல்வேறு சார்பதிவு அலுவலகங்கள் வருவாய் மாவட்டத்திற்குத் தனியாக இருந்தாலும், சில சார்பதிவகங்கள் பதிவு மாவட்டம் என்ற பெயரிலே வேறொரு வருவாய் மாவட்டத்திலே இணைந்து இருக்கின்றன. இப்படிப்பட்ட நிருவாகக் காரணங்களுக்காக சிரமங்கள் ஏற்படுகின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். பதிவு ஓர் இடத்திலே செய்கிறோம்; வருவாய் மாவட்டம் ஓர் இடத்திலே இருக்கிறது; இதைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும், அதற்காகவாவது சார்பதிவாளர் அலுவலகம் திறக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அவர் கூறிய கருத்து நல்ல கருத்து.*

முற்பகல் 10—20

ஏற்கெனவே, வருவாய்த் துறையில் இப்படிப்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்களில் வருவாய் மாவட்டம் வேறு, பதிவு மாவட்டம் வேறு என்று இருப்பதை மறு சீரமைப்பு செய்ய வேண்டுமென்ற கருத்துரு இருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, மணப்பாறையில், தோகைமலையிலே புதிதாக சார்பதிவாளர் அலுவலகம் அமைக்கப்பட வேண்டுமென்றால், 19 கிராமங்கள் இணைக்கப்பட வேண்டும். அந்த 19 கிராமங்களில் 7 கிராமங்கள் குளித்தலையிலே, கரூர் மாவட்டத்திலே வருகின்றன. மீதமுள்ள 12 கிராமங்கள் திருச்சி மாவட்டத்திலே வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தோகைமலை வறட்சியான பகுதி என்று சொல்கிறார்கள். அங்கே வாகனங்கள் பதிவு என்பது மிக மிகக் குறைவு. ஆவணப் பதிவுகளைப் பொறுத்தவரையில், மணப்பாறையில் ஆண்டுக்கு 6,000 ஆவணங்கள்தான் பதிவு செய்யப்படுகின்றன. ஏற்கெனவே வருவாய் குறைவாக இருக்கிறது. சார்பதிவாளர் அலுவலகம் தொடங்கப்பட வேண்டுமென்றால், தொடரும் செலவு 15 இலட்சம் ரூபாய், தொடராச் செலவு 13 இலட்சம் ரூபாய் ஆகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி, அந்தப் பதிவு மாவட்டம், வருவாய்

மாவட்டத்தினைக் கணக்கில் கொண்டு, அங்கிருக்கின்ற மக்கள் வருங்காலத்திலே நகர்ப்புறத்தில் சார்பதிவாளர் அலுவலகத்திற்குச் சென்று வருவதற்கு ஏதுவாக, அரசாங்கத்திற்கும் ஆவணப் பதிவுகள் கூடுதலாக இருக்கும்பட்சத்தில், வருவாய் கூடுதலாக வரும்பட்சத்தில், எதிர்காலத்திலே இதுகுறித்து ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.*

திரு. அ. பாப்பா சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் வறட்சியான பகுதி என்று குறிப்பிட்டதாகச் சொன்னார்கள். வறட்சியான பகுதி என்று சொன்னேனே தவிர, அந்தப் பகுதி திருச்சியை ஒட்டியிருக்கின்ற காரணத்தால், அங்கிருக்கின்ற நிலங்கள் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. அதிகமான பத்திரப் பதிவுகள் நடைபெறுகின்றன. தற்பொழுது வெளி மாவட்டங்களுக்குச் செல்லும்போது கிட்டத்தட்ட 20 கிலோ மீட்டர் தூரத்திற்குமேல் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, பத்திரப் பதிவுக்கு வேறு மாவட்டத்திற்குச் செல்லாமல், கரூர் மாவட்டத்திலேயே பதிவு செய்வதற்கு ஆவன செய்யவேண்டும். ஆகவே, வறட்சியான மாவட்டத்திலுள்ள ஏழை மக்களுக்கு அந்த இடத்திலேயே பதிவு அலுவலகத்தை அமைத்து, சவுகரியமான சூழ்நிலையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் சொல்லும்போது வறட்சியான மாவட்டம் என்று சொன்னேனே தவிர, திருச்சியை ஒட்டியிருப்பதால், அங்கு இருக்கின்ற நிலங்கள் நல்ல விலைக்கு விற்கப்படுவதைக் கருத்திற்கொண்டு, அங்கு பத்திரப் பதிவு அலுவலகம் அமைத்துத் தர வேண்டுமென்று மீண்டும் தங்கள்மூலமாக மன்றாடிக் கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி அந்தப் பகுதியிலே வருவாய் மாவட்டம், பதிவு மாவட்டங்களைப் பிரித்து, ஆவணங்களின் அடிப்படையிலே, கூடுதலான ஆவணங்கள்*

பதிவு செய்யும்பட்சத்திலே, அரசாங்கத்திற்குக் கூடுதலாக வருவாய் கிடைக்கும்பட்சத்திலே, கண்டிப்பாக எதிர்காலத்திலே இதுகுறித்து ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதி, கருங்காலங்குடியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் பத்திரப் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். பஞ்சாயத்திலேகூட தீர்மானம் போட்டு, 25 செண்ட் இடம் தேர்வு செய்து, பத்திரப் பதிவுத் துறைக்கு அனுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆட்சியிலே, கருங்காலங்குடியில் இயங்கி வருகின்ற பத்திரப் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே தமிழகத்திலே வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 52 கட்டடங்களுக்கு 26 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.*

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அவருடைய தொகுதியிலே அந்தப் பகுதியிலே சார்பதிவாளர் அலுவலகத்திற்கு இடம் கொடுத்திருக்கும் பட்சத்திலே, கண்டிப்பாக மாண்புமிகு அம்மா அவர்களது கவனத்திற்குக் கொண்டு சென்று, அங்கே சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டப் பதிவாளர் அலுவலகமும், மாவட்ட உதவிப் பதிவாளர் அலுவலகமும் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இணைப் பதிவாளர் அலுவலகம் சொந்தக் கட்டடத்தில் 24 சென்ட் இடத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றது. மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திற்கும், உதவிப் பதிவாளர் அலுவலகத்திற்கும் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றித்தான் நான் ஏற்கெனவே சொல்லியிருந்தேன். தற்போது சார்பதிவாளர் அலுவலகங்களைக் கட்டுகின்றபோது, எப்படி ஒருங்கிணைந்த நீதிமன்றங்களை எல்லாம் கட்டுகின்றோமோ அதைப்போல, ஒரு நகரத்தில் 4, 5 நீதிமன்றங்கள் இருந்தால் அவற்றை ஒருங்கிணைத்து, ஒரே வளாகத்தில் நீதிமன்றங்களைக் கட்டுவதைப்போல, ஒரு நகரத்தில் 3, 4 சார்பதிவாளர் அலுவலகங்கள் இருந்தால், அவற்றுக்கு இடம் கிடைக்கின்றபட்சத்திலே அவற்றையெல்லாம் ஒரே கட்டடத்திலே கட்டிக் கொடுப்பதற்கு இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி, அந்த 2 அலுவலகங்களையும் ஒரே கட்டடத்தில் கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 152, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*